# நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் ரூ. 44.11 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகள்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டினார்



**நாகப்பட்டினம்,டிச.12-**
நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ. 43.34 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளுக்கு மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஃ பள்ளி கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ரூ. 77.34 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். உடன் கலெக்டர் ப.ஆகாஷ், , தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; , கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர்; வட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் செருதூர் கிராமத்தில் மாநில நிதியின் கீழ் ரூ. 21.83 கோடி மதிப்பீட்டில் வெள்ளையாற்றின் முகதுவாரத்தில் கரை பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணிகள், வேளாங்கண்ணி பேரூராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 17.78 கோடி மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்பு நேர்கல் சுவர் அமைக்கும் பணிகள், மாநில நிதியின் கீழ் ரூ. 0.84 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள், காமேஸ்வரம் விழுந்தமாவடி மற்றும் வேதாரண்யம் வட்டம் வானவன் மகாதேவி ஆகிய மீனவ கிராமங்களில் நபார்டு திட்டத்தின் கீழ் தலா ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் மீன் ஏற்றும் தளத்துடன் கூடிய மீன் ஏலக் கூடம் அமைக்கும் பணிகள் போன்றவைகளுக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டினார்.

அதனை தொடர்ந்து, கீழ்வேளூர்; வட்டம் வேளாங்கண்ணி பேரூராட்சியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகம் ஊளுசு நிதியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் விற்பனைக் கூடம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் விழுந்தமாவடி ஊராட்சி தென்பாதி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 34.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டடங்கள் மற்றும் விழுந்தமாவடி ஊராட்சி மீனவர் காலனியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் ரூ. 42.49 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன்பிடி வலைபின்னும் கட்டடம் போன்றவைகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கே.ஸ்ருதி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்; கோ. ஜெயராஜ், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஆ.டாயானா ஷர்மிளா, வேளாங்கண்ணி பேரூராட்சி துணைதலைவர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், தமிழ்நாடு அரசு மீனவர் நல வாரிய உறுப்பினர் கோ.மனோகரன், மீன்பிடி துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளர் க.சரவணகுமார், மற்றும் அரசு அலுவலர்கள்; கலந்து கொண்டனர்



தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் கலெக்டர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் அரசு உதவி பெறும் கல்லூரி முதல்வர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுடன் புதிய வாக்காளர் சேர்ப்பு பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி கல்வி இணை இயக்குநர் அ.குணசேகரன் உடன் உள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட சோதனை செய்யும் பணிகள்

## கலெக்டர் மு.அருணா நேரில் ஆய்வு



**புதுக்கோட்டை,டிச.12-**
புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு வைப்பறையில் வைக்கப்பட்டுள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சோதனை நடைபெற்று வரும் பணிகளை, மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ கலெக்டர் மு.அருணா, , அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் (11.12.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எதிர்வரும் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்; நடைபெற உள்ளதைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு வைப்பறையில் வைக்கப்பட்டிருந்த புதுக்கோட்டை மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சோதனை நடைபெற்று வருகிறது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு வைப்பறையில் டீயடடழவ ருnவை 5இ126 எண்ணிக்கையிலும், ஊழவெசழட ருnவை 2இ380 எண்ணிக்கையிலும், ஏஏPயுவு - 2இ460 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 9இ966 எண்ணிக்கையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, பெங்க@ர் பெல் நிறுவனத்தின் 9 பொறியாளர்கள் முதல் நிலை சோதனை பணிகளை இன்றையதினம் காலை 09.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை மேற்கொண்டு வருகின்றனர். இந்த முதல் நிலை சோதனை பணிகள் நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர்கலெக்டர் மு.அருணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் வடிவேல்பிரபு , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.திருமால், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கே.முத்துச்சாமி, தனி வட்டாட்சியர் (தேர்தல்) அ.செந்தமிழ்குமார், வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள், பெங்க@ர் பெல் நிறுவன பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

போக்குவரத்து
விதிகளை
மதிக்கவும்

# மயிலாடுதுறை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் கோடிக்கணக்கான மதிப்புள்ள திட்டங்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

## பயனடைந்தோர் நிறைந்தது மனம் நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

**மயிலாடுதுறை,டிச.12-**
மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தாட்கோ மற்றும் தொழிலாளர் நலவாரியம் சார்பில் "நிறைந்தது மனம்" திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்.ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் திட்டத்தின் மூலம்;

ரூ.3 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பிலான ஆட்டோவினை பயனாளியிடம் வழங்கி, இத்திட்டத்தின் பயன்கள்; குறித்து கலந்துரையாடினார்கள்.முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி, சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் பல எண்ணற்ற திட்டங்கள் வாயிலாக, பெண்களின் முன்னேற்றத்திற்காக, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அன்னை தெரசா அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண திருமண நிதி உதவி திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதி உதவி திட்டம், ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்



டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் விதவைப் பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் முன்னேற்றத்திற்காக கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் அமைக்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் 2022-2023 ஆம் நிதியாண்டில் தலா



ரூ.5992 வீதம் 50 விதவைப் பெண்களுக்கு ரூ.2 இலட்சத்து 99 ஆயிரத்து 600 மதிப்பிலான தையல் இயந்திரங்களும், 2023-2024 ஆம் நிதியாண்டில் தலா ரூ.5824 வீதம் 13 விதவைப் பெண்களுக்கு ரூ.75 ஆயிரத்து 712 மதிப்பிலான தையல் இயந்திரங்களும், தலா ரூ.8436 வீதம் 20 விதவைப் பெண்களுக்கு ரூ.1 இலட்சத்து 68 ஆயிரத்து 720 மதிப்பிலான நவீன தையல் இயந்திரங்களும், 2024-2025ஆம் நிதியாண்டில் தலா ரூ5539 வீதம் 30 விதவைப் பெண்களுக்கு ரூ. ரூ.1 இலட்சத்து 66 ஆயிரத்து 170 மதிப்பிலான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு திருமண நிதி உதவித்;திட்டத்தின் (விதவைப் பெண்களின் மகள்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம்) கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 23 பெண்களுக்கு ரூ.11 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியும், ரூ.10 இலட்சத்து 28 ஆயிரத்து 399 மதிப்பீட்டில் 184 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் நிதியாண்டில் 449 பெண்களுக்கு ரூ.1 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியும், ரூ.2 கோடியே 14 இலட்சத்து 25 ஆயிரத்து 831 மதிப்பீட்டில் 3.592 கிலோ கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் நிதியாண்டில் 58 பெண்களுக்கு ரூ.25 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியும், ரூ. 35 இலட்சத்து 29 ஆயிரத்து 300 மதிப்பீட்டில் 464 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், எருக்கூர் கிராமத்தை சார்ந்த ரீட்டாமேரி என்ற பயனாளிக்கு மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் திட்டம், தாட்கோ துறை சார்பில் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் தொழிலாளர் நலவாரியம் சார்பில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.3 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பிலான ஆட்டோவினை வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் திட்டத்தின் பயன்கள் குறித்து கலந்துரையாடினார்கள்.

திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி கூறியதாவது:

எனது பெயர் ரீட்டாமேரி. (வயது 40). நான் சீர்காழி வட்டம், எருக்கூர், 192, அந்தோணியார்; தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். என் கணவர் ஒரு எதிர்பாராத விபத்தில் இறந்து விட்டார். எனது அன்றாட செலவினங்களை எதிர்கொள்ள நான் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். எனது உறவினர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் என்னைப்போன்றவர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்று கூறினார்கள். அதன்பிறகு, நான் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் உள்ள அலுவலர்களை நேரில் சென்று என் நிலைமையை எடுத்துக்கூறினேன். எனக்கு ஆட்டோ ஓட்ட தெரியும் என்றும், பயணிகள் வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளேன் என்று கூறியதன் அடிப்படையிலும், எனக்கு மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் திட்டம், தாட்கோ துறை சார்பில் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் தொழிலாளர் நலவாரியம் சார்பில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் ஆகிய திட்டங்களின்; கீழ் விண்ணப்பிக்குமாறு அறிவுரை வழங்கினார்கள். பிறகு, விண்ணப்பம் மற்றும் அதற்கான உரிய சான்றிதழ்களை அலுவலர்களிடம் வழங்கினேன். அதனைத் தொடர்ந்து, எனது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து, எனக்கு ரூ.3 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பிலான ஆட்டோவினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள். அந்த ஆட்டோவினை கொண்டு, ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து, எனது செலவினங்களை மேற்கொள்வேன். இது எனக்கு பொருளாதார ரீதியாக மிகவும் உதவியாக இருக்கும். எனவே, இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் எனது, மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

**தொகுப்பு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மயிலாடுதுறை மாவட்டம்**

# ஏவிசி கல்லூரியில் புதிய சிமெண்ட் சாலை மாணவர்கள் பயன்பாட்டிற்காக திறப்பு



**மயிலாடுதுறை,டிச.12-**
மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தல் ஏவிசி கல்லூரி வளாகத்தில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் மாணவிகளுக்கான ஓய்விடம் விரிவாக்கம் செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

70 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக் கல்லூரியில் மயிலாடுதுறை, தஞ்சை திருவாரூர், கடலூர், காரைக்கால், நாகப்பட்டினம், ஆகிய மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி படிப்புகளை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இவர்களின் நலனை கருத்தில் கொண்டு கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் எளிதில் பயணிக்கக் கூடிய வகையில் சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்து விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனை சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் ஏவிசி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரியுமான கே. வெங்கடராமன் ரிப்பன் வெட்டி மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். கல்லூரி முதல்வர் ஆர்.நாகராஜன், முன்னாள் தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் மேஜர் ஜி. ரவிசெல்வம், துணை முதல்வர் எம். மதிவாணன், டீன் எஸ். மயில்வாகனன் தேர்வு நெறியாளர் ஜி.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஏவிசி பொறியியல் கல்லூரி இயக்குனர் எம்.செந்தில் முருகன், பாலிடெக்னிக் கல்லூரி இயக்குனர் ஏ. வளவன், முதல்வர்கள் பாலசுப்பிரமணியன், தனசேகரன் மற்றும் திரளான மாணவ மாணவிகள் பேராசிரியர்கள்,ஆசிரியர் இல்லாத பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை பொதுநல அமைப்பினர் ஆர்ப்பாட்டம்



**கும்பகோணம்,டிச.12-**
கும்பகோணம் காந்தி பூங்கா அருகே தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மற்றும் பொதுநல அமைப்புகள், சார்பில் 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் டைமண்ட்ராஜா தலைமை தாங்கினார். கும்பகோணம் வர்த்தகர் சங்கத்தலைவர் சேகர் முன்னிலை வகித்தார். கும்பகோணம் மாநகராட்சியில் தமிழக அரசுக்கு எதிராக செயல்படும் அதிகாரிகளை கண்டித்தும், 65 ஆண்டுகளாக கும்பகோணம் ரெயில்வே நிலையத்தில் செயல்பட்ட ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பினர். தஞ்சை தெற்கு மாவட்ட தலைவர் கணேசன், மாவட்ட கவுரவ தலைவர் ரமேஷ், பொருளாளர் ராஜ், மாநகராட்சி கவுன்சிலர் அய்யப்பன், மற்றும் பொதுநல அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கும்பகோணம் வர்த்தகர் சங்க துணைத்தலைவர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

# திருவாரூரில் வலங்கைமான் அமமுக நகர செயலாளர் உள்ளிட்ட பலர் முன்னாள் அமைச்சர் ஆர்.காமராஜ் முன்னிலையில் அதிமுகவில் இணைத்தனர்



**திருவாரூர்,டிச.12-**
தமிழகத்தில் மக்களுக்கு எதிரான விரோத போக்கு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதனை அகற்றி விடவும் மக்கள் நலனை பாதுகாத்திடும் மக்களுக்கு பல நல்ல திட்டங்களை கொண்டு வரும் ஒரே தலைவர் எடப்பாடி பழனிச்சாமிதான் என்று திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அ.ம.மு.க நகர செயலாளர் ஆறுமுகம் மற்றும் பலர் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் உணவுத் துறை அமைச்சர் நன்னிலம் சட்ட மன்ற உறுப்பினரும், திருவாரூர் மாவட்ட கழக செயலாளரும், கழக அமைப்பு செயலாளருமான ஆர்.காமராஜ் முன்னிலையில் மீண்டும் தாய் கழகமான அதிமுகவில் தங்களை இணைந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் வலங்கைமான் மேற்கு ஒன்றிய செயலாளர் சங்கர் நகர செயலாளர் குணசேகரன் வலங்கைமான் கிழக்கு ஒன்றிய செயலாளர் இளவரசன் மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் ஆர் ஜி பாலா ஒன்றிய விவசாய அணி செயலாளர் மாத்துர் குமார் நகர பொருளாளர் அருள்முருகன் நகர இளைஞர் பாசறை மதுசூதனன் மாவட்ட பரதிநிதி ஹாஜா மைதீன் ஒன்றிய கழக இனை செயலாளர் பிரபாகரன் இளைஞர் பாசறை ஒன்றிய செயலாளர் சங்கர் உப்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூய்மை இயக்கம் 4.0 திட்டத்தின் கீழ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் மீ.தங்கவேல் ஆய்வு



**கரூர்,டிச.12-**
தூய்மை இயக்கம் 4.0 திட்டத்தின் கீழ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (11.12.2025) மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தூய்மை இயக்கம் 4.0 இயக்கத்தை கரூர் மாவட் டத் திற் குட் பட்ட பொது சுகாதாரத்துறையை சார்ந்த அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அனைத்து அரசு மருத்துவமனைகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அனைத்து துணை சுகாதார நிலையங்களில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தி மருத்துவமனைகளை தூய்மை நிலையில் வைக்கும் பொருட்டு தூய்மை பணிகள் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வரும் தூய்மை இயக்கம் 4.0 பணிகளை கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது கழிவு நீக்கம் செய்ய வேண்டிய உபகரணங்கள் முறையாக விதிமுறைகளின் படி கழிவு நீக்கம் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டது. மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர், இருக்கை மருத்துவ அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின் போது மருத்துவக்கல்லூரி முதல்வர் (பொ) ராஜா, உதவி திட்ட அலுவலர் அன்புமணி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

